நாள்: **09.08.2024**

**O.S. No. 44/2023**

**வா.சா.1**

**பெயர்: சிவராமகிருஷ்ணன், த/பெ. சுப்ரமணியன்**

**<u>2, 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> :**

தாவா சொத்தின் புல எண். 85/1 ஆகும். அதன் மொத்த விஸ்தீரணம் 35.5 ஏர்ஸ். மேற்படி தாவா சொத்தில் திரௌபதி அம்மன் கோயில் , காளியம்மன் கோயில், ராமர் மடம், நூலகம், சுமைதாங்கி மற்றும் என்னுடைய கொட்டகை உள்ளது. தேவர்கண்டநல்லூர் ஊரில் உள்ள கடைகளுக்கு வர்த்தகர் சங்கம் உள்ளதா என்றால் ஆமாம். நான் பூஜை பொருள் விற்பனை செய்யும் கடை வைத்துள்ளேன். எனது கடைக்கு பெயர் பலகை கிடையாது. ஒரு நாளைக்கு சுமார் 300 ரூபாய் வருமானம் வரும். அந்த கடைக்கான பொருட்கள் திருவாரூரிலிருந்து வாங்குவேன். அதற்கு ரசீது கிடையாது. அந்த கடையின் கதவு எண். 1/100B2 ஆகும். மேற்படி கடை நடத்தி வருவதற்கு சம்மந்தமாக ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. மேற்படி கடை நடத்தி வருவது தொடர்பாக அதை காட்டுவதற்கான எந்தவிதமான ஆவணமோ, புகைப்படமோ தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். அவ்வாறு எந்த கடையும் நடத்தவில்லை என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. அந்த இடத்தில் 1997 முதல் கடை நடத்தி வருகிறேன். ஊரில் உள்ள அனைவரும் அந்த விபரம் தெரியும். கிராம நிர்வாக அலுவலர் சான்றாவது கடை சம்மந்தமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நான் சொல்லும் புல எண் அனைத்தும் அரசுக்கு சொந்தமானது என்றால் இல்லை. திருக்கோயில் நிர்வாகத்திற்கு சொந்தமானதாகும். தாவா இடத்தில் பேருந்து நிறுத்தம் கட்ட சொல்லி 1ம் பிரதிவாதி வசம் ஊர் மக்கள் மனு கொடுத்துள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஆனால், எனது கடைக்கு எதிர்புறம் பேருந்து நிறுத்தம் உள்ளது. 1ம்

பிரதிவாதி ஊராட்சி மன்றத் தலைவர், திராவிட முன்னேற்றக் கழகத்தை சேர்ந்தவர். நானும் அதே கட்சியில் உறுப்பினர். தேர்தல் சமயத்தில் எனக்கும் , 1ம் பிரதிவாதிக்கும் இடையே பிரச்சனை இருந்தது என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் தாவா இடத்தில் கடை எதுவும் கிடையாது என்றாலும், அமரர் ஊர்தி நிறுத்தும் இடம் என்றாலும் சரியல்ல. தேர்தல் பிரச்சனை காரணமாக நான் 1ம் பிரதிவாதி மீது இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கடை வைத்துள்ளதாக சொல்லும் இடத்தில் புதிய பேருந்து நிறுத்தம் கட்டுவதற்காக ஊர் மக்கள் கொடுத்த மனுவின் அடிப்படையில், 1ம் பிரதிவாதியால் கடந்த 11.01.2023 ம் தேதி தீர்மானம் போடப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தீர்மானம் பற்றி தெரிந்து கொண்டுதான் 1ம் பிரதிவாதி மீதுள்ள விரோதம் காரணமாக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி பேருந்து நிறுத்தம் கட்டுவதற்கு 10 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றாலும், அதை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு பயன்படுத்த விடாமல் இடையூறு செய்யும் விதமாக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 02.06.2023 அன்று தாவா சொத்தில் அளப்பதற்கு பிரதிவாதிகள் வந்ததாகவும், அதை நான் தடுத்து நிறுத்தியதாகவும் வழக்கிற்காக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. பொதுவாக, ஒரு காகிதம் வெகு ஆண்டுகள் ஆனால் அதன் தன்மை மாறும் என்றால் அது காகிதத்தை பொறுத்தது. அதை பாதுகாத்து வைத்திருப்பது பொறுத்து அமையும். தேவர்கண்டநல்லூர் ஊராட்சி தற்சமயம் திருவாரூர் தாலுக்கா. அதற்கு முன்பாக குடவாசல் தாலுக்காவில் இருந்தது. எப்பொழுது திருவாரூர் தாலுக்கா மாறியது என்றால் சுமார் 6 வருடங்களுக்கு முன்பாக. எனக்கும், கோயிலுக்கும் குத்தகை ஏற்பட்டது எந்த வருடம் என்றால் 03.03.1997 ஆகும். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் தேவர்கண்டநல்லூர், திருவாரூர் தாலுக்கா, மாவட்டம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அதில் உள்ள குத்தகை வாசகத்தில் குடவாசல்

தாலுக்கா என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி ஆவணம் இந்த வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றால் இல்லை. மேற்படி ஆவணத்தில் பகுதி தொகை ஒரு ஆண்டிற்கு ரூ.1,100/- என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். மேற்படி கோயில் டிரஸ்டி S. ராமலிங்கம் என்று Seal ஆக தான் உள்ளதே தவிர கையெழுத்து இல்லை என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் கண்டுள்ளபடி பகுதி தொகை பெற்றுக் கொண்டு எழுதி கொடுத்திருக்கும்பட்சத்தில், கையொப்பம் செய்திருப்பார் என்றாலும், அவ்வாறு எழுதிக் கொடுக்காததால் தான் வழக்கிற்காக தயார் செய்யப்பட்ட காரணத்தினால்தான் அதில் சீல் உள்ளது என்றாலும் சரியல்ல. மேற்படி வா.சா.ஆ.1 ஆவணம் 1997 ல் அச்சடிக்கப்பட்ட திருக்கோயில் Letter pad என்றால் ஆமாம். அப்போதே colour print இருந்ததா என்றால் ஆமாம். நான் சென்று கேட்டதால் டிரஸ்டி எனக்கு குத்தகைப்பத்திரம் எழுதிக் கொடுத்தார். அவ்வாறு குத்தகை பத்திரம் எழுதும்பொழுது முத்திரைத் தாளில் தான் எழுத வேண்டும் என்று நான் எதுவும் கேட்கவில்லை. மேற்படி திரௌபதை அம்மன் திருக்கோயில் இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ளதா என்றால் இல்லை. தனியார் கோயில். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 ஆவணமான ரசீதுகள் எதற்கானது என்றால் எனது கடைக்கு வரி செலுத்தியதற்கானது ஆகும். மேற்படி ரசீதுகள் எனது கடைக்கானது அல்ல என்றாலும், வேறு ஒரு சொத்திற்கானது என்றாலும் சரியல்ல. மேற்படி ரசீதுகளில் கடைக்கான கடை பெயரோ அல்லது கதவு எண்ணோ குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.2 வரிசையில் 07.02.2007 ம் தேதியிட்ட ரசீதில் அருள்மிகு பிள்ளையார் கோயில் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும், அது இந்த வழக்கிற்காக சம்மந்தப்பட்டது இல்லை என்றாலும் சரிதான். மேற்படி பிள்ளையார் கோயில் எனக்கு சொந்தமானது. அந்த பிள்ளையார் கோயில் சம்மந்தப்பட்ட ரசீதுகள் தான் இந்த வா.சா.ஆ.2 ன் வரிசையில் உள்ளது என்றால் இல்லை. உச்சிமேட்டில் எனக்கு சொந்தமாக ஒரே ஒரு வீடு உள்ளது. அதன்

கதவு எண். 1/28 ஆகும். நான் கடை வைத்திருப்பதாக சொல்வது தேவர்கண்டநல்லூரில் தான் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 3 ஆவணத்தில் உள்ள ரசீதுகள் வீட்டு வரி ரசீது என்று தான் உள்ளது. மேற்படி வா.சா.ஆ.3 வரிசையில் உள்ள 27.02.1998 ம் தேதியிட்ட ரசீதில் காமராஜ்க்காக சிவராமகிருஷ்ணன், உச்சிமேடு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். 1990 லிருந்து காமராஜ் வைத்திருக்கிறார், அவரிடமிருந்து நான் வாங்கினேன். மேற்படி விபரம் பிராதில் சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. மேற்படி ரசீதில் 1/60 என்று உள்ளது என்றால் சரிதான். மேற்படி ரசீதுகள் அனைத்திலும் வீட்டுவரி ரசீது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தாவா கடை முதலில் வீடாக இருந்தது. கடந்த 17.03.2023 ம் தேதியிட்ட வா.சா.ஆ.3 வரிசையில் உள்ள ரசீதில் கதவிலக்கம் என்ன என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 1/100B2 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி B2 என்பது பின்னிட்டு அதை சேர்க்கப்பட்டதற்கான பேனா மை வித்தியாசம் உள்ளது என்றால் அது என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை. மேற்படி வா.சா.ஆ.3 வரிசையில் உள்ள 27.02.1998 ம் தேதியிட்டு இரண்டு ரசீதுகள் உள்ளது என்றால் ஆமாம். மேற்படி இரண்டாவது ரசீதில் 1994-1995, 1995-1996, 1996-1997 ம் ஆண்டுகளுக்கு சிவராமகிருஷ்ணன், உச்சிமேடு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மற்றொரு ரசீது 1/60 ற்கு உண்டானது என்றால் சரிதான். மேற்படி இரண்டு ரசீதுகளும் உச்சிமேட்டில் உள்ள வீட்டிற்கான ரசீது என்றால் இல்லை. மேற்படி வா.சா.ஆ.3 வரிசையில் 08.03.2002 ம் தேதியிட்ட ரசீதில் கதவிலக்கம் 1/207/2 என்று தான் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.3 வரிசையில் உள்ள அனைத்து ரசீதுகளும் எனது வீட்டிற்கானது என்றாலும், கடை நடத்துவதாக சொல்லப்படும் இடத்திற்கானது இல்லை என்றாலும் சரியல்ல. 1997 லிருந்து குத்தகைக்கு நடத்தி வருவதாக சொல்லும்பட்சத்தில், ரசீதுகள் சரியாக இருந்திருக்கும் என்றாலும், அவ்வாறு இல்லாத காரணத்தினால் தான் அனைத்து வருடங்களுக்கான

ரசீதுகளும் தாக்கல் செய்யப்படவில்லை என்றாலும், அதன் காரணமாக மேற்படி ரசீதுகள் தாவா சொத்திற்கானது இல்லை என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.2 வரிசையில் 30.01.2023 ம் தேதியிட்ட ரசீதில் செலுத்துபவர் பெயர் சாந்தமீனா என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது தவறுதலாக வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பொதுவாக, ஒரு நபரின் எழுத்து நடைமுறை வயதாகும்பொழுது மாறும் என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ரசீதுகளில் உள்ள தேதிகள் அனைத்தும் சரியானது தானே என்றால் ஆமாம். 1998 லிருந்து 2023 வரை ரசீதுகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆனால், அனைத்து வருடங்களுக்கும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். என்னிடம் இருந்த ரசீதுகளை தாக்கல் செய்துள்ளேன். ஐந்து ரசீதுகள் மட்டுமே தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். திரௌபதை அம்மன் திருக்கோயிலுக்கு வேறு என்னென்ன குத்தகைக்கு உள்ளது என்றால் எனக்கு தெரியாது. மேற்படி வா.சா.ஆ.4 வரிசையில் உள்ள ரசீதுகளில் புல எண். 85/1 ல் உள்ள கடை எண். 1/100 B2 சிவராமகிருஷ்ணன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அனைத்து ரசீதுகளிலும் உள்ள எழுத்து நடைமுறை ஒன்றாக உள்ளது என்றால் ஆமாம். 01.04.1998 ம் தேதியிட்ட ரசீதில் வருடம் 1996 என்பது 1998 ஆக மாற்றி எழுதப்பட்டுள்ளது என்றால் இல்லை. மேற்படி வா.சா.ஆ.4 ரசீதுகள் அனைத்தும் இந்த வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றால் இல்லை. மேற்படி ரசீதுகள் அனைத்தும் தற்சமயம் அச்சடிக்கப்பட்டது என்றால் இல்லை. மேற்படி ரசீதுகளில் ரசீது எண்ணிற்கு இடையே வரிசை எண்கள் அதிக காலக்கட்டத்திற்கு குறைவான ரசீது எண்கள் இடைவெளியே உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் சொல்லும் இடத்தில் கடை கிடையாது என்றாலும், வழக்கிற்காக ஆவணங்கள் தயார் செய்யப்பட்டுள்ளது என்றாலும் இல்லை. எனக்கும், 1ம் பிரதிவாதிக்கும் இடையே இருந்த பிரச்சனையின் காரணமாக தாவா புல எண்ணில் பேருந்து நிறுத்தம் கட்டக்கூடாது என்பதற்காக பொய்யான

ஆவணங்களை தயார் செய்து இதுபோன்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவாவில் நான்கெல்லை தவறு என்றால் சரியல்ல. பொய்யான காரணங்களை சொல்லி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

ஒம் / - S. விஜய் ஆனந்த்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருவாரூர்.